**தலைப்பு – 166 – நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்தோபர் 31 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். ஆவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (இ) வரை காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட 10 கணக்காய்வு ஐயவினாக்களில் 02 இற்கு 2014 நவம்பர் 25 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சிற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 34,958,700,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 26,075,754,237 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 8,882,945,763 தொகை அதாவது 25.4 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழும் | 187,700,000 | 187,140,095 | 559,905 | 0.3 |
| மூலதனம் | 34,771,000,000 | 25,888,614,142 | 8,882,385,858 | 25.5 |
| மொத்தம் | 34,958,700,000 | 26,075,754,237 | 8,882,945,763 | 25.4 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

* 9 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 895,200,000 மொத்தத் தேறிய நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

* 24 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் நிதியற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 21 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

* 2 செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு போதியளவாக இல்லை எனக் குறிப்பிட்டு நிதிப்பிரமாணம் 66 இன் படி ஏனைய செலவின விடயங்களில் இருந்து ரூபா 9,300,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு பெறப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

* 6 செலவின விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் படி ஏனைய செலவின விடயங்களிலிருந்து ரூபா 1,262,300,000 கூட்டுத்தொகையான நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த 6 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 1,467,171,658 ஆக இருந்தது. அதன்படி அந்த 6 செலவின விடயங்களுக்காக ஏனைய செலவின விடயங்களிலிருந்து பெறப்பட்ட ரூபா 1,262,300,000 தொகையான மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

---------------------------------------------------------------------------------------------------------------------------

2005 திசெம்பர் 10 ஆந் திகதி முதல் வேலை நீக்கஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடுவதற்கிருந்த ரூபா 38,095 கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

**1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் களஞ்சியத்தில் பொருட்பதிவேடு 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பதிவேட்டுப் பொருட்களின் மெய்மையாய்வின் போது சில பொருட்களில் உள்ளபடியான மீதி மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் சில பொருட்களில் பதிவேட்டுப் புத்தகத்தின்படி மீதி மற்றும் உள்ளபடியான மீதிகள் குறிப்பிடப்படாது பற்றாக்குறை மற்றும் மிகைகள் குறிப்பிடப்பட்டிருந்தது.

**1.5 ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குரிய 11 வாகனங்கள் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் காப்புறுதி, வருமான அனுமதிப்பத்திரம், பழுதுபார்த்தல் மற்றும் டீசல், வாடகையாக ரூபா 1,108,584 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**1.6 கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

---

வெளிநாட்டு உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்ட சமூக நீர் வழங்கல், சுகாதார செயற்திட்டம் மற்றும் லுணாவ சுற்றாடல் மேம்படுத்தல் செயற்திட்டம் என்ற இரண்டு செயற்திட்டங்களுக்கும் உரிய 18 வாகனங்கள் மீளாய்வாண்டின் போது அமைச்சின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**1.7 இணங்காமைகள்**

---

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 1645(அ) | அமைச்சின் வாகனங்களுக்காக சம்பவக் குறிப்புப் புத்தகம் முறையான பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1646 | வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் அமைச்சிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணையும் மாதாந்த பொழிப்பு அறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிருவாகச் சுற்றறிக்கை | |
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப்பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தி மற்றும் 1.1.7 ஆம் பந்தி | இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து நிலுவையாக இருந்த கடன் மீதியை 2 மாதங்களுக்குள் இடமாற்றலாகிச் சென்ற நிறுவனத்திலிருந்து அறவிடவேண்டியிருந்ததுடன் அவ்வாறில்லாத போது மூன்றாவது மாதத்தில் அது அமைச்சினால் மாதாந்த கணக்குப்பொழிப்பின் மூலம் உரிய நிறுவனத்திடமிருந்து அறவிடவேண்டும். அமைச்சிலிருந்து இடமாற்றலாகிச் சென்ற 5 உத்தியோக்கதர்களிடமிருந்து ரூபா 767,158 கூட்டுத்தொகையான கடன் மீதியை அவ்வாறு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 1.8 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் நலிவுகள்

பாரியளவிலான 07 செயற்திட்டங்களுக்காக 17 நிதி மூலங்களிலிருந்து ரூபா 1,119,800,000 தொகையான நிதி வழங்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,881,200,000 நிதியேற்பாடு வழங்கப்பட்ட பரியளவிலான 07 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அந்த 07 செயற்திட்டங்களுக்கான நிர்வாகச் செலவினமாக ரூபா 289,769,029 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 1.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சுகாதாரம் தொடர்பான தெற்காசிய மாநாட்டிற்கான (SACOSAN) செலவின விடயமொன்றில் மீளாய்வாண்டின் இறுதியின் போது எஞ்சியிருந்த நிதியேற்பாட்டிலிருந்து தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்தாது 2013 திசெம்பர் 31 ஆந் திகதி கூறுவிலைகள் கோரப்பட்டு அமைச்சிற்காக 04 கணனிகள் மற்றும் 02 மடி கணனிகள் என்பன ரூபா 363,760 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 1.10 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் அமைச்சிற்கு கையளிக்கப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக கையளிக்கப்பட்ட திகதி, வாகன இலக்கம், வாகனத்தின் வகை, கொள்வனவு செய்யப்பட்ட திகதி போன்ற விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 செயற்திட்டங்களுக்குரிய பழுதடைந்த 17 வாகனங்கள் அமைச்சின் வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அவைகளை உரிய பிரகாரம் அமைச்சிற்கு கையளிக்கப்படாமையினால் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு முடியாதிருந்தது.

(இ) ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவுகள் தொடர்பான அறிக்கைகளில் கட்டிடங்களினதும் நிர்மாணங்களினதும் (2104) இன் கீழ் 2013 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டதாக ரூபா 149,699 தொகை காண்பிக்கப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2014 மே 02 ஆந் திகதி வரையிலும் உரிய 03 கராஜ் கொட்டகைகள் நிர்மாணிக்காது அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட நிர்மாணப் பொருட்கள் அமைச்சின் வளவில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) பொது மக்களினால் நீர் மற்றும் நீருடன் தொடர்புடையதாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது கிடைத்த பொது மக்கள் முறைப்பாடுகளுக்கு 2014 ஒக்தோபர் மாத இறுதி வரையிலும் போதியளவான பிரகாரம் கவனம் செலுத்தப்படாதிருந்தமை கீழே காண்பிக்கப்பட்ட தகவல்களிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற 103 பொது மக்கள் முறைப்பாடுகள் நீர் நம்பிக்கை பொறுப்பிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதற்காகவும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

| பொது மக்கள் முறைப்பாடுகளின் தன்மை | பொது மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பதிலளிக்கப்பட்ட பொது மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பதிலளிக்கப்படாத பொது மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை | சதவீதமாக பதிலளிக்கப்படாத பொது மக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **தனிப்பட்ட நீர் விண்ணப்பம்** | | | | |
| மத்திய மாகாணம் | 52 | 34 | 18 | 35 |
| தென் மாகாணம் | 46 | 14 | 32 | 70 |
| நாடு முழுவதும் | 256 | 163 | 93 | 36 |
| **பிழைகளுடன் உள்ள நீர்க் கட்டணம்** | | | | |
| நாடு முழுவதும் | 29 | 17 | 12 | 41 |
| **புதிய நீர் உத்தேசத் திட்டம்** | | | | |
| நாடு முழுவதும் | 37 | 19 | 18 | 49 |
| **புதிய நீர் உத்தேசத் திட்டத்தை நீடித்தலும் அபிவிருத்தி செய்தலும்** | | | | |
| நாடு முழுவதும் | 72 | 27 | 45 | 63 |

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 25 | 15 | 10 |
| மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| இரண்டாம் நிலை | 82 | 60 | 22 |
| ஆரம்ப நிலை | 39 | 27 | 12 |
| மொத்தம் | 150 | 105 | 45 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 45 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

## (ஆ) ஏனைய தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள்

முறையான அங்கீகாரமின்றி ஏனைய இரண்டு நிறுவனங்களிலிருந்து ஐந்து ஊழியர்கள் அமைச்சில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அந்த ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் வேதனங்கள் உரிய நிறுவனங்களின் மூலம் செலுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.